[2016 ஆகஸ்ட் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2488—திரு. அ. ராமு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எமரால்டு வெலிங்டன் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை குன்னூர் நகர் பகுதிக்கும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், குன்னூர் நகராட்சியில் இந்திய பாஸ்டியர் நிறுவனம் மற்றும் வெலிங்டன் இராணுவ நிலையம் ஆகிய பகுதிகளுக்கு எமரால்டு அணையை நீராதாரமாகக்கொண்டு ரூ.95.30 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் குன்னூர் நகராட்சிப் பகுதிக்கான குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 40 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிருவாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 23]

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடியட்டும்' என்றவர்களுக்கு முடிவுரை எழுதி, 'விடியட்டும்' என்றவர்கள் விரக்தியில் திரிய (மேசையைத் தட்டும் ஒலி) 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதனை உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படும் மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரே நகராட்சியான குன்னூர் நகராட்சி மற்றும் பாஸ்டியர் இன்ஸ்டியூட் பகுதி வரை வசிக்கும் அனைத்து மக்களின் குடிநீர் தேவைகளை நிறைவேற்றிடும் அரசாக, மக்களின் கோரிக்கையை ஏற்று, எமரால்டு-வெலிங்டன் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கென, ரூபாய் 95 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதில் குன்னூர் நகராட்சிப் பகுதி மற்றும் பாஸ்டியர் இன்ஸ்டியூட் வரையிலான பகுதிக்கென விரிவுபடுத்தி, ரூபாய் 40 கோடியே 19 இலட்சம் நிதி ஒதுக்கி, நிருவாக ஒப்புதல் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், புரட்சித் தலைவி, தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும், குறிப்பாக, குன்னூர் நகர்ப் பகுதியில் வசிக்கும் மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் மூலமாக மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பித்து, மனநிறைவுடன் உரையை நிறைவு செய்து அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியிலே குடிநீர்ப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. இப்போதுகூட அங்கே, கிருஷ்ணாபுரம் பகுதியில் பிரசித்திபெற்ற கோயிலினுடைய கும்பாபிஷேகம். அந்தக் கும்பாபிஷேகத்திற்கு

வரக்கூடியவர்களுக்குக்கூட போதுமான அளவிற்குத் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால், வார்டு 2, 3, 32, 33—ல் வசிக்கும் மக்கள் எல்லோரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேறக்கூடிய தருவாயிலே இருக்கின்றது. அது எப்பொழுது விரைவாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்திய வரலாற்றிலே குடிதண்ணீருக்காக இன்றைக்கு அதிகமான நிதியை ஒதுக்கி, அதிகமான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 5 வருடங்களாக ரூபாய் 21,478 கோடியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் 5 வருடங்களாக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 7,250 கோடிதான். கிட்டத்தட்ட ரூபாய் 14 ஆயிரம் கோடிக்கு மேல் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கி, இன்றைக்கு மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி, ஊராட்சி என அனைத்துப் பகுதிகளுக்கும் சிறப்பான முறையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். சில பகுதிகளில் மழை குறைவாக இருக்கும்; சில பகுதிகளில் மழை அதிகமாக இருக்கும். அப்பொழுது குடிநீர்ப் பிரச்சினைகள் சில இடங்களில் வரத்தான் செய்யும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை எப்படி எதிர்கொள்கிறது என்பதுதான் முக்கியம். இன்றைக்குப் புயல் வந்தாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, எப்படி எதிர்கொள்கிறது என்பதுதான் முக்கியம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டங்களை அறிவித்தாலும் சரி—அது தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தாலும், அவையெல்லாம் விரைவாக நிறைவேற்றப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே

2016 ஆகஸ்ட் 23]

கோயில் கும்பாபிஷேகம் நடைபெறும் பகுதியில்கூட குடிநீர்ப் பிரச்சினை இருப்பதாகக் கூறினார்கள். அங்கேயும் ஏதாவது பிரச்சினை இருந்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதியில், பின்வரும் கடலோரக் கிராமங்களிலுள்ள மக்களிடமிருந்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து, காவேரிக் குடிநீரை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கோரி நிறைய மனுக்கள் வந்துள்ளன. அதிலும், குறிப்பாக திருவாடனை வட்டம், திருப்பாலைக்குடி ஊராட்சியில் மந்திரநாதர் கோயில், காந்தி நகர், ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம், சித்தூர்வாடி ஊராட்சியில் வெட்டுக்குளம், கோவிலேந்தல், மேலச்சேந்தல், கீழச்சேந்தனேந்தல், கீழச்சித்தூர்வாடி, உகந்தான்குடி மற்றும் இராமநாதபுரம் ஒன்றியத்தில் சக்கரக்கோட்டை கிராமப் பள்ளிவாசல் அருகில் மிக மிக அவசியமாக, கடலோரக் கிராமங்களுக்கு, மக்களின் நலன் கருதி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, காவேரிக் குடிநீரை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில், பல பஞ்சாயத்துகளில் உள்ள ஊர்களைக் குறிப்பிட்டு, அங்கெல்லாம் காவேரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அந்தப் பகுதிகளில் வருவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருந்தால், ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை

எடுக்கப்படும். அதைப்போல, இராமநாதபுரம் மாவட்டத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். ஆகவே, எந்தத் திட்டத்தில் செயல்படுத்தமுடியும் என்பதை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவோர் பட்டியலில் இருக்கிறீர்கள். அப்போது சந்திக்கலாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கையில் சந்திக்கலாம். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் வேண்டாம்; போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன்.*

முற்பகல் 10–20

வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

97—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***3127—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.